விலை அணா 1

முரசொலி

முரசு 1 | திருவாரூர் பெரியார் ஆண்டு 69 (6—6—48) ஞாயிற்றுக்கிழமை | ஒலி 17

அரசியல் அர்த்தகாரி.

மாதொருபாகம்-மகேஸ்வரன் ஒருபாகம். இது அறிவுக் கொவ்வா புராணத்தில் ஒரு கேலிச் சித்திரம். அர்த்தகாரீஸ்வரர் சன்பர் அதனை அடியார்க்குமடியார்! இதோ அரசியல் வானில் அதே விதமான ஒரு அற்புதப் பிறவி.

மதம், மூட நம்பிக்கைகளின் மண்டையிலடிப்பது சோஷியலிசம். அந்த சோஷியலிசப் போர்வையிலே நின்றுகொண்டு, மகான் ரமணரும், மகாத்மா அரவிந்தரும் மக்கள் தம் வழிகாட்டிகள் என திருவாய்மலர்ந்தருளுகிறார் தோழர் ஜெயப்பிரகாஷ்!

ஒருபுறம்.....ஒழிக மதம்!

மறுபுறம்.....அரவிந்தர், ரமணர், அருள்பெறுவோம்.....!

இந்த இரட்டை மனிதர்—அர்த்தகாரீஸ்வரர்—இங்குதேவையில்லை என்கிறோம். தவறா?

மாதமிரு முறை

ஆசிரியர்: மு. கருணாநிதி.

பெருச்சாளி ஓடிய ஓசையில் விழித்தெழுந்தவர் கந்தனின் கதறலைக் கேட்க முடியவில்லை—விசித்திரமான காதுதானே?

"என்ன கணக்கரே, அந்த இருசப்பன் பாக்கி வந்ததா? இல்லாவிட்டால் ஜப்திக்கு ஏற்பாடுசெய்யும்"

"என்னடா ரங்கா, அந்த தாதுலிங்கம் ஏதோ ஜபர்தஸ்தி செய்யுறானும். தங்கையையே தாரமாக வைச்சுக்கிறான். எட்டு வயதில் ஒரு பொடிப் பயல்கூட இருக்கிறான். போடு கோட்டிலே. இன்றைக்கு ராத்திரிக்கே ஓட்டி விடு. ஊர் சிரிக்கட்டும்."

"என்ன சாமி, அந்த சண்பகத்தை ஒருமாதிரி முடிச்சுடுங்கள். நம்ம மன்மத விலாசத்திற்கு அழைத்து வந்திடுங்க"

"அடேயாரப்பா அந்தபயல் சின்னுன் என்னமோ கட்சி கிட்சின்னு பேசிகிட்டுத்திரியறானுமே அவன் வீட்டிலே இன்றைக்கு நெருப்பு வைச்சிடுங்க"

என்ற பேசும் வாய்—அதே நேரத்தில் பண்ணையாட்களின் படைவரிசை வந்து நின்றது. சின்னுன் முன்னணியில் நின்றான்.

"எஜமான், கூலி போதவில்லை இரண்டு மாக்காலே மூன்றாக்க வேண்டும் இல்லாவிட்டால் வேலைசெய்ய முடியாது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்"

சின்னுனுக்கு விடைசொல்ல வாயா இல்லை—ஊமையா? பக்கத்திலிருந்தவருக்கு கண்ணால் எதையோ சொன்னார். புலி போல் பாய்ந்தனர். தொழிலாளர் சிதறி யோடினர்

வயலோரம் சென்றார்—

உழைப்பாளிகள் வயலிலும், களத்திலும் வேலைசெய்து கொண்டிருந்தனர். அவர்களின் ஜீவியர்வை தெரிந்ததா? ஒட்டிய வயிறும், இருண்ட கண்களும், வாண்ட தலையுமா அவரது பார்வைக்குரிய பொருள்களாயின—அல்ல, அல்ல! வயலில் நின்று வயிற்றுக்கு வாதாடும் இளம் பெண்களின் இளமையும், அந்த இளமையின் செழிப்பை எடுத்துக்காட்டும் அங்கங்களின் பூரிப்பையும் பார்த்தன அவரது கண்கள்—இழவு வீட்டில் மோகனம் பாடின! அந்த இளமையை கள்ளத்தனமாக கொள்ள கொள்ள வேண்டும் என்ற ஆசை பிறக்கிற அளவு அவரது கண்கள் ஊடுருவிப் பாய்ந்தன! குறும்பும், பார்வையும் கலந்துவரும் கண்கள்—இது என்ன கூத்தய்யா!

சேற்றிலும், சகதியிலும் வாழும் தனது பண்ணையாள்களின் இடத்திலே எழும் துர்நாற்றத்தை நுகர்ந்து அதனை மாற்றிடவேண்டும் என்ற எண்ணம் பிறக்காது, அந்தி மயக்குகிற வேளைகளில் ஜமீன் கோட்டையை, சாராயம் நிறைந்த கண்ணாடிக் கிண்ணத்தை முகர்ந்திடுகிறது அவரது மூக்கு—என்ன விசித்திரம்?

"கோயிலுக்கா, இந்தா ஆயிரம்"—கரம் நீளுகிறது!

"சேரியில் பள்ளியா-படித்து பட்டம் வாங்கப் போகிறதா கழுதைகள்!"—கை முடங்குகிறது.

ஜோசியர் இல்லங்களுக்கு, கோயில்களுக்கு வழக்காடு மன்றங்களுக்கு.....செல்லும் அவரது கால்கள் தேய்ந்து வாழ்வினர், சிதைந்த குடும்பத்தவர் வாழும் சேரிகளில் நுழைவதில்லை.....!

இந்த விநோத வியாதி மங்கை மங்கலம் பண்ணைக்குமட்டும் பரிச்சயமானதல்ல, பணப் பண்ணைகளிலெவளர்ந்துவரும்செல்வ வியாதி, அவர்களுடன் சிறுடன் பவனிவரும் பணக்கார பிணி!

★

இந்த வியாதிக்கு மருந்து வைத்தியர்களிடம் இல்லையாம் வேறெவரிடம் உள்ளதாம்—வியாதியின் போக்கு எப்படி விசித்திரமானதாக இருக்கிறதோ அப்படியே மருந்தும் விசித்திரமானது! பண்ணைகளில் பரவிடும் கொள்ளை கொலைக் கொல்லை 'பத்தியம்' இருக்க வேண்டியவர்கள் மக்கள், பண்ணைகளல்ல!

மருந்து என்ன? சமதர்மம் பொதுவுடைமை, பொதுவுடமை, பொதுவுரிமை.....என்ற பல பெயர்களால் அழைக்கப்படும் ஒரே மாத்திரை. கார்ல் மார்க்ஸ் லெனின்,.....என்ற வைத்தியர்களின் பெயர்கள் அடிபடும். ஆனால் பழைய லேபிள் பயன்படுத்தி போலிகள் இலாபம் அடைவதும் உண்டு. ஆகவே உண்மையான வாசகம் வைத்திருக்கும் மாத்திரையை சாப்பிடுங்கள், பத்தியமிருங்கள்—மங்கை மங்கலம் மக்களுக்கு சொல்லலாம்!—மற்றவர்கள் மட்டும் விதிவிலக்கா என்ன?

ஒளி

ஆசிரியர், கா. மு. ஷெரீப்.

மாதமிருமுறை வெளி அணு 2.

ஒளி அலுவலகம், தீநுவாநூர்.

காக்கா பிடிக்கும் ஆசிரியர் கூட்டத்தில் சேராத தோழர் ஷெரீப் அவர்கள் மனதிற்பட்டதை மறைக்காது கூறும் பண்புடையவர். அந்தப் பண்பு ஒளியில் ஒளிவிடுகிறது. காங்கிரஸ் மண்டபத்து லீலா விநோதங்களை கதர் சட்டையிலிருந்தே தாக்குகிறார். இது எல்லாக் கட்சி ஆசிரியர்களுக்கும் தேவையான "பத்திரிகா தர்மம்." படித்தற்குரிய கல்லெடு ஒளி.

முரசொலி

பெரியார் ஆண்டு 69,
வைகாசி 24 ஞாயிறு
(6—6—48)

3, 57, 90.

"என்ன துணிவப்பா இது"

'எப்படியப்பா எழுதிருண் இந்த மனுஷன்"

"வாயில் வந்தபடி பேசுகிறானே வகை கெட்டவன்"

"ஆட்டு மந்தைபோல் ஒரு கூட்டம் நம்மைப் பின்பற்ற இருக்கும் போது இவனுக்கு மட்டுமென்ன அறிவு கொழுந்து விடுகிறதாம்"

"ஆளை உயிரோடு விடுவதே ஆபத்து"

"இவன் இருக்கும் வரையில் நாம் நிலைதூக்க முடியாதுபோலிருக்கே"

"விஷத்தை யல்லவா வாரி யிறைக்கிறான் கிரியன்பாம்பு"

இப்படி சொல்லம்புகள் மாறி மாறி வீசப்பட்டன அந்த வீரர் மேல். வீரர் கலங்கவில்லை. விலா வொடிந்து போனாலும், வெட்டுண்டு சாய்ந்தாலும் கவலைப் படாத வைர நெஞ்சத்தினர் அவர். மனதிற்பட்டதை மறைத்துப்பேசும் கோழைத்தனமோ, கால்கழுவி வாழ நினைக்கும் கபோதித் தன்மையோ, சுயலாபத்திற்காக சூதர்களை சுற்றி நிற்கும் சோதாப்பண்போ, அவர் இதயத்தை எட்டிப் பார்க்கவுமில்லை.

"ஏய் காஸ்திகனே!...நீ நாசமாய்ப்போக"

"வகுப்புவாத விஷ விருக்ஷமே .....உன்னை வாழ விடுகிறோமா பார்!"

இந்த வசைவுகளை வாழ்த்தாக நினைத்தார்.

"வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வேண்டும்" அந்தக் குரலை சற்று பலமாக அமைத்தார். திருப்பித் திருப்பிச் சொன்னார். அடிக்கடி சொன்னார். அதற்காகவே வாழ்வை அர்ப்பணிக்க வந்துவிட்டார். புத்தன் முதல்... இராமலிங்கன் வரையில் கூறவதற்கு நடுங்கிய கொள்கைகளை இன்று துணிவாகச் சொல்வதென்றால்—அதுவும் நம்மவர் காலடியில் நாட்டாட்சி கிடக்கிற வேளையில் சொல்வதென்றால்.... என்ற ஆச்சரியப்பட்ட ஆரியம் தனது பாகு மொழியையே பலி பீடமாக அமைத்து திராவிட சமுதாயத்தைக் காவுகொள்ள ஆரம்பித்தது.

அய்யோ.....அந்த பலிபீடத்தில் சாய்ந்தவர் எத்தனை பேர்!

காமராசர்கள், முத்துரங்கர்கள், பக்தவத்சலர்"கள், கிராமணியார்கள், நாடிமுத்துக்கள், தியாகராசர்கள்.....

"சகோதரர்களே.....வகுப்புவாதத்தில் வழுக்கி விழாதீர்கள். நாம் பாரதத்தாயின் கர்ப்பத்தில் கிடந்த புதல்வர்கள்"

பூணூலை உருவிக்கொண்டே ஆரியம் பேச.....புன்சிரிப்பு தெளிய திராவிட விபீஷணர்கள் காசோஷம் செய்ய .....காங்கிரஸ் கட்சி வளர்ந்தது.

வகுப்புக்கள் ஒழிந்தால் தான் வகுப்புவாதம் ஒழியும்.....அதுவரை நாம் வாழ—வளம்பெற வகுப்புவாரி பிரதிநிதித்துவம் தேவை.....ஆரியம் ஒற்றுமை வலை விரிக்கும். ஒன்மேறகுல மென்றுகூறும். உம்மையெலாம் ஒதிய மரங்களாக்கி உயர்ந்த ஸ்தானங்களில் அமர்ந்து உல்லாசம் பேசும். அது ஒரு ஓநாய்க் கூட்டம்"

இந்தக் கருத்தை அந்த வீரர் எடுத்துரைத்தார். வேதியர் அவரை நாஸ்திகர் என்றனர். விபீஷணர் அவரை வகுப்புவாதி என்றனர். விழித்துக்கொண்ட தோழர்கள் அவரை பெரியார் என்றனர். விபீஷணர் விழிப்படைய—விழித்துக் கொண்டவர் விளக்கம் பெற உதவி புரியும் வகையில் நாம் தாவேண்டிய செய்தி ஒன்றுளது.

"திருப்பதி ஓரியண்டல் கல்லூரியில் போது உணவு முறை ஏற்படுத்துவது பற்றி அரசாங்கம் வெற்புறுத்துகிறது. தேவஸ்தானக் கமிட்டியார், அரசாங்கத்தை இவ்வுத்தரவுபற்றி புனராலோசனை செய்யுமாறும், போது உணவு முறையில் கலந்துகொள்ளச் சம்மதிக்காத மாணவர்களுக்குத் தம் காலம் கொடுக்கப்பட்டு வரும் உபகாரச் சம்பளத்தை தொடர்ந்து கொடுக்க அனுமதிக்குமாறும் வேண்டிக்கொள்கிறது. ஆனால் அரசாங்கத்தார் இதுபற்றி புனராலோசனை செய்யத் தயாராக இல்லை, என்று அறிகிறேன். ஓரியண்டல் கல்லூரியில் 150 மாணவர்கள் இருக்கிறார்கள். பிராமண மாணவர்கள் 90 பேர் இருக்கின்றனர். ஹரிஜன மாணவர்கள் 3 பேர்களே உள்ளனர். பிராமண மாணவர்களும், பிராமணரல்லாத மாணவர்களும், போது உணவு முறை ஏற்படுத்தப்பட்டாலும், தனியாக உண்ண விரும்புபவருக்கு உபகாரச் சம்பளம் கொடுப்பது நிறுத்தப்பட்டாலும் கல்லூரியை விட்டு விலகிவிட ஒரே முகமாக விரும்புகின்றனர். அரசாங்கத்தை இதுபற்றி மீண்டும் தெளிவாக—தாராள மனப்பான்மையுடன் சிந்திக்கும்படி வேண்டிக்கொண்டும் போது உணவு முறையை ஏற்க மறுக்கும் மாணவர்களுக்கு உபகாரச் சம்

பளத்தை தோடர்ந்து கோடுத்த மாறு தேவஸ்தான கமிட்டியை யும் வேண்டிக்கொள்கிறேன்."

வகுப்பு வாதத்தை நாயக்கர் கும்பல் நாட்டில் பரப்புகிறது என்று பிரச்சாரம் செய்கிற பிரா மமணரத்தம குலத்துப் பெம்மான் ஸ்ரீ துரைசாமி அய்யங்காரின் இந்த அறிக்கை 29—5—48 மெயிலில் காணப்படுகிறது.

கல்லூரி மாணவர்கள் நூற்றி யைம்பது பேர். நூற்றுக்கு மூவராய் வாழும் பார்ப்பன குலத்தவர் அந்தக் கல்லூரியில் தொண்ணூறு பேர்! நூற்றுக்கு தொண்ணுற்றேழு பேராயுள்ள திராவிட மாணவர்கள் அங்கு ஐம்பத்தேழுபேர். படிப்பில்லா சமுதாயமாக பாழ்பட்டு கிற்கும் பழங்குடி வகுப்பினர் மூன்று பேர்.

சதவிகிதக் கணக்குப்படி 100 க்கு 60 பார்ப்பனர் 100க்கு 38 (பார்ப்பனரல்லாத) திராவி டர். 100க்கு 2பேர் ஆதிதிரா விடர்.. இந்த அழகில் அங்கே யும் ஒரு குருகுலத்தை சிருஷ் டிக்க நினைக்கிறார் ஆரிய குல மகிபர்.

எல்லோரும் அன்னை பாரத தேவியின் அருந்தவப் புதல்வர் கள் என்று கீதம்பாடிய கூட்டம் இன்று பேதம் பாடுகிறது. அதற்கு தலையாட்டும் பொம்மை களாக சில தன்மானமற்ற திரா விடரையும் துணைக்கழைக் கிறது.

நாம்...பரிதாபமாக,... வயிற் றெரிச்சலோடு.....விழியிலே நீர் வழிய—கெஞ்சுகின்ற தோரணை யில்...ரத்தபாசம் விடாமல்..... மன்றாடிக் கேட்டுக்கொள்கிறோம் அந்த 57 பேரை நோக்கி!..... ஐம்பத்தி ஏழுவரே!.....வகுப்பு வாரி பிரதிநிதித்துவத்தை ஏள னம் செய்து.....கீழ்ப்பாக்கம் வைத்தியசாலையை கண்டனத்துக்கு பயன்படுத்துகிற வெறியர் கூட் டத்தின் செயலை சற்று சீர்தூக் கிப்பாருங்கள். நீங்கள் மக்கள் கணக்கில் 97சத விகிதத்தினர். அவர்கள் மூன்றுசத விகிதத் தினர். ஓரியண்டல் கல்லூரியில் நீங்கள் 57பேர். அவர்கள் 90 பேர். உங்களுக்கும், அவர்க ளுக்கும் உட்கார, உலவ, உல்லா சம் அனுபவிக்க உழைத்து உழைத்து உருமாறிய—இரத் தத்தை வியர்வையாக மாற்றிய —வம்சத்தவர் மூவர்.

அந்த மூவரையும் மூலையில் தள்ள ஆரியத்தின் மூளை அஸ்தி வாரம் அமைக்கிறது. பலம் தேடிக்கொள்ள உங்களையும் பிணைத்துக்கொண்டு பேசுகிறது.

ஆம்.....ஆஞ்சநேய சக்தீவர் களை துணைக்கழைத்துக்கொண்டு வெற்றிப்பண் பாடியதுபோல— சர் ராமசாமிகளை, சண்முகங் களை இழுத்துக்கொண்டு தன் சமுதாயத்தை காத்துக்கொண் டதுபோல—துரைசாமி அய்யங் காருக்கு உங்கள் 57 பேரின் துணை தேவையாயிருக்கிறது. அந்த மூன்று பேரையும் மூன்று தினுசுகளாகக் கருதுகிறார் உங் கள் 57 பேரையும் 57 பிராஹ்மி தர்களாக 57 கருவேப்பிலைகளா கக் கருதுகிறார்.

நீங்கள் அறுபது பேராகுங் கள். ஆரியம் தொண்ணூறும் அந்த முனையில் நிறகட்டும். திராவிட இன உணர்ச்சியை இனிமேலாவது, காற்றில் பறக்க விட்டு மீளாத பழியை சுமந்திக் கொள்ளாதீர்கள். இதையே தான் நாம் அரசாங்கத்தாருக்கும் அறிவிக்க வேண்டியுளது.

கல்லூரியை விட்டு தொண் ணூறு பூணூலும், என் ஐம்பத்தி ஏழுவரும், கண்ணிருந்தும் குரு டாய்—காட்டுமிராண்டித் தன் மையராய்— அவர்களோடு சேர்ந்து விலக நேர்ந்தாலும்... அந்த மூவருக்காக—புது சமு தாயத்தின் அந்த அஸ்திவாரக் கற்களுக்காக...ஓரியண்டல் கல் லூரியை கடத்தும் தணிவை ஏற்றுக் கொள்ளுங்கள் என்ற கோரிக்கையை "உள்ள ஒலி" யாக்கித் தருகிறோம். பெரியாரை வகுப்புவாதி என்னும் பெரி யோரே! திராவிடர் கழகத்தாரை குறுகிய மனப்பான்மை படைத் தோர் எனக் கூறுவோரே! வகுப் புவாரி பிரதிநிதித்துவத்தை எதிர்த்து நிற்போரே! மீண்டும் கருத்தில் பதியவையுங்கள் அந்த எண்களை! 3. 57, 90.

இருவர் உள்ளம்.

கஞ்சை சுதந்திர நாடக சபை யில் தோழர் M. S. முத்துகிருஷ் ணன் அவர்களால் உருவாக்கப் பட்டு நடைபெற்ற 'இருவர் உள் ளம்' நாடகம் கண்டவர் உள்ளங் களில் எல்லாம் குடியேறிற்று.

சேரியும் அக்கிராரமும் கல் யாணம் செய்து கொள்கின்றன. மருதிக்கும் சாச்சக்கும் மணம். உயர் குடியபமும் தாழ்மைக் குடும்பமும், கை கோர்த்துக் கொள்கின்றன. பெரியாரும்— காந்தியும், பாரதியும் பாரதிதா சனும் தீண்டாமை ஒழிப்பில் ஒன்றுபடுத்தப் பட்டிருக்கிறார் கள். சுயமரியாதை இயக்க அரிச் சுவடி இருவர் உள்ளம்! முத்துக் கிருஷ்ணன் அவர்களின் கலை முயற்சிக்கு நல்ல வெற்றி!....

சுவைமிக்க
சிற்றுண்டிகளுக்கு
விஜயபுரம்
பீம விலாஸ்

★ பாத்துவாஜ் ★

(அரங்கண்ணல்)

பாத்துவாஜ்—ஒரு காலம் காங்கிரசின் வைரத் தூணாகயிருந்தவர்—கப்பூனிஸ்டுக் கட்சியின் சிறந்த தொண்டர்; தலைவர். சாவுப் படுக்கையில் கிணறிக் கொண்டிருந்த அவரை காங்கிரஸ் சர்க்கார் ஏப்ரல் 4ந்தேதி பன்று கைது செய்தது. நான்கே நாட்களில் அவர் டோரடுன் சிறையில் பிணமாகிக் கிடந்தார்!

"இந்திய சர்க்கார் உங்கள் கட்சிமீது எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கையின்படி உங்களைக் கைது செய்யுமாறு கட்டளை பிறப்பித்துள்ளார்கள்....."

"எங்கே.....? கட்டளையைப் படி!"

கட்டிலைச் சுற்றி நின்ற 'போலீஸ் புலிகள்' தங்கள் கையிலிருந்த கட்டளையைப் படித்தனர்.....

திடீரென முத்திரைகள் பதிந்து கிடந்த உள்ளத்திலிருந்து வெடித்த பெருமூச்சு அவர் முகத்தில் புன்முறுவலாக மின்னியது. சிறிது நேரத்துக்கு முன் வாயிலிருந்து இரத்தம் கொட்ட, அதனோடே உயிரைப் பறிப்பது போன்று வதைத்த இருமல், அதன் பலனை எழுந்த களைப்பு அவர் உடலின் ஒவ்வொரு நரம்பிலும் தளைத்துக் கொண்டிருப்பதைக் காட்டுவதுபோல ஒரு பெருமூச்சும் லேசாக எழும்பிற்று!

அருகிலிருந்த தண்ணீரை, படுத்தபடியே வாயில் வைத்து ஒரு 'முணற' உட்கொண்டார். .....இரத்த நாற்றம் வீசிக் கொண்டிருந்த வாய் அசைந்தது. அவர் அடிவயிற்றிலிருந்து மெதுவாக எழும்பிய ஒலி சிங்கக் குரலாக மாறியது!

"என்ன.....? இன்னுமொரு முறை படி!"

போலீஸ் புலியொன்று படித்தது. "சர்க்கார் இந்தியக் கம்யூனிஸ்ட்டுக் கட்சியின் மீது எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கையின் விளைவாக பாத்வாஜ் என்ற பெயருடைய உம்மைக் கைது செய்யுமாறு கட்டளைப் பிறப்பிக்கின்றனர்....."

'ஊம்.....' மீண்டும் லேசான புன்சிரிப்பு அவர் சாவு முகத்தில் பளிச்சிட்டது!

ஓட்டி, உலர்ந்து, உட்காரவும் வலுவற்று, படுக்கையிலேயே பன்னாளாகக் கிடந்த அவர் உடலில் ஒரு பரபரப்பு...எழுந்தார்.....எழுமுப முடியவில்லை! பக்கத்தில் கவலையின் உருவாக நின்று கொண்டிருந்த தோழியர்கள் கை கொடுக்க...தட்டுத் தடுமாறி எழுந்து உட்கார்ந்து காட்டி 'இப்பொழுதோ இன்னுங் கொஞ்ச காலமோ' என்று உயிர் ஓடிக்கொண்டு வேசலாடிக் கொண்டிருந்தாலும் தன் இதயத்தில் கலக்கத்தின் நிழல் படியவில்லை என்பதைக் காட்டுவது போலிருந்தது!

வாயைத் திறந்தார். என்ன சொல்லப் போகிறாரோ வென்று எதிர் நின்ற பெண்கள் ஒருவர் முகத்தை யொருவர் பார்த்துக் கொண்டனர்.

'கொஞ்சம் பொறுங்கள் புறப்படுகிறேன்' என்ற பதிலைக் கூறிவிட்டு அருகிலிருந்த வெள்ளைத் தாளில் ஒரு சில வார்த்தைகளை பலமற்ற தன் கரங்களால் கிறுக்கி, அதை படித்து ஒரு முறை பார்த்தார்!

'அம்மா! இதை 'அவளிடம்' கொடுத்து விடுங்கள்.....'

போலீஸ் புலிகள் நின்ற இடத்தைவிட்டு நகரவில்லை. தள்ளாத தாய் ஒன்றும் புரியாதவராக, நீர் கண்களில் வழிய, நிகைத்து நிற்க, சுற்றிநின்ற தோழியர் எதுவும் கூற முடியாத நிலையில் அவரைப் பார்த்துக்கொண்டே நின்றனர்.....

மெதுவாக கட்டிலிலிருந்து கால்களைத் தரையில் வைன்றினர். அவரைச் சுற்றிநின்ற பெண் 'காம்ரேட்'கள் அணைத்துக் கொள்ள, மெதுவாக எழுந்து நின்ற அவர் கண்கள் ஒருமுறை அந்த அறையைச் சுற்றிப் பார்த்தன.....

"எப்படி ஐயா அழைத்துச் செல்லப்போகிறீர்கள்" ஆத்திரக் குரல் எழுப்ப ஒரு தோழியர் போலீஸ் புலிகளைக் கேட்டார், பாதையோரம் பரிதாபகரமாக இறந்து கிடக்கும் பிச்சைக்காரர்களையும் எடுத்துச் செல்ல 'டோங்கா' கொண்டு வரும் பொழுது, இவரை 'ஒரு ஆசியல் அறிஞரை—தலைவரை—அழைத்துச்செல்ல எதாவது (Stretcher) கொண்டுவந்திருக்க மாட்டார்களா என்ற சபலத்தினுடன்! 'ஒன்றுமில்லை, மெதுவாக கடத்தி அழைத்துச் சென்றுவிடுகிறோம்!" போலீஸ் புலியின் பதில் 'இல்லை' யென்று வந்தது!

தளர்ச்சி, அயர்வு இரண்டும் போட்டியிட மெதுவாக ஒரு அடியை எடுத்து வைத்தார் பாத்வாஜ்...அவர் தாயின் உள்ளங் குலுங்குவது போல, அங்கு நின்ற அவர் சகோதரிகள் தோழர்கள் ஆகியோரின் பெருமூச்சு அதிர்வதுபோல, அவர் மெலிந்த உடல் ஒருமுறை குலுங்கியது!

அன்பு ததும்பும் கண்கள் அருவியாக, மரமாகி நின்ற தாய் அவரை ஓடோடியும் சென்று பிடித்துக் கொண்டாள்!

ஒரே ஓட்டத்தில், ஒரு நிமிடத்தில் எத்தனையோ முறை அந்த மாடியிலிருந்து கீழே இறங்கி வந்துள்ள பாத்வாஜருக்கு, சாதாரண தன் வீட்டு மாடிப் படிகளிலிருந்து அன்று கீழேவாப் பிடித்த நேரம் 45 நிமிடங்கள்! முக்கால் மணி!!

வீட்டு வாயிலில் 'போலீஸ் லாரி' காத்துக்கிடந்தது. வாயிற் படியில் ஒரு காலும், தெருவில் ஒரு காலுமாக வைத்துக் கொண்டு ஒருமுறை மீண்டும் தன் வீட்டை நிமிர்ந்து பார்த்தார்..... ஓராண்டாக அந்த இடத்தைக் கண்ணுல்கூட காண முடியாதபடி படுக்கையில் கிடந்த அவருடைய ஓர்வம் அத்தனையும் அவர் பார்வையில்வழிந் தோடியது.....

பாத்வாஜ் குரல் தழதழக்க கேட்டார் போலீஸ்களை 'எங்கே என்னைக் கொண்டு செல்கிறீர்கள்? மூடட்டுக் குரல்கள் வெகு சாவதானமாக 'எங்கட்குத் தெரியாது' என்றன!

என்னமோ, ஏதோவென்று விபரம் புரியாது திகைத்து, கலங்கிக்கொண்டிருந்த தாய் தன் ஆசை மகனிடம் ஓடினர்...

'தம்பீ எங்கேயப்பா போகப் போகிறாய்?'

பாத்வாஜின் இதயத்தில் ஊடுருவிப்பாய்ந்த அன்னையின்பாசம் மனைதக் குழப்பியது.

'சிறைக்கு அம்மா! காங்கிரஸ் சர்க்காரின் சிறைக்குச் செல்கிறேன் தாயே"!!

★

வெள்ளை எகாதிபத்தியத்தை விரட்ட ஆகஸ்டு 'புரட்சி'யில் கலந்துகொண்டவர்! பல ஆண்டுகள் 'எட்டமுடியாத இடமாகிய' காங்கிரஸ் காரியக்கமிட்டியின் உறுப்பினராக யிருந்தவர், உடல், உயிர், பொருள் அத்தனையும் காட்டின் விடுதலைக்கு கல்கியவர், படித்து பட்டம் பெற்றபின் அதிகார மமதையுடன் வாழ்வதற்கு எத்தனையோ சந்தர்ப்பங்கள் காலடியில் காத்துக்கிடந்தும், துச்சமெனத்தள்ளி 'தாயின் விலங்கினைத் தகர்த்தெரிவதே' தன் தாரகமந்திரமெனக் கொண்டிருந்தவர், வீரக்காளை—சோரம் போகாத மூளையினர்,—ஒருபோது அவர் கூறிய யோசனைகளை 'வேதவாக்கென' மதித்த காங்கிரஸ் தோழர்களின் அதிகார மமதையால் —தொழர் பாத்வாஜ் ஏப்ரல் 4ந் தேதியன்று 'சஸ்பீன்' என்ற தன் இலக்கத்தில் கைது செய்யப்பட்டார்! கைது செய்யப்பட்ட நேரம், கலகம் விளைத்துக்கொண்டிருந்த பொழுதோ, சர்க்காரை ஒழிக்கத் தலை மறைவாக சதி செயது கொண்டிருந்த பொழுதோ, வேலைநிறுத்தபுயல் வீசச் செய்ய, வேண்டுவன செய்து கொண்டிருந்த பொழுதோ அல்ல! 104 டிகிரி காய்ச்சல்! நிமிடத்துக்கு நிமிடம் வாயிலிருந்து குடம் குடமாக இரத்தம் கக்கிக் கொண்டிருந்த நேரம்!

ஒருமுறை இருமுறையல்ல பன்முறை அதிகார வர்க்கத்தின் அடக்கு முறைக்குப் பலியாகி சிறையில் வாழ்ந்ததால், 'மக்கள் வாழ்வே தன் வாழ்வு' என்ற லட்சிய மூச்சுடன் எப்பொழுதும் 'கட்சி, கட்சி' என்று ஓர்வமுடன் உழைத்ததன் விளைவாக அவருடைய உடல் 'பல நோய்க்கிருமிகளுக்கு' உறைவிடமாயிருந்தது! என்புருக்கி நோய், ஆஸ்த்மா, அடிக்கடி வரும் காய்ச்சல்கள் அவர் உடலைக் கொஞ்சங் கொஞ்சமாகக் கரைத்து படுக்கையிலேயே கிடக்கும்படி செய்து விட்டது!

படுக்கையில் தன் கடைசி மூச்சு காற்றுடன் கலக்க போராடிக்கொண்டிருந்த வேளையில் தான்—காருண்ய மிக்க காங்கிரஸ் சர்க்காரின் இரகசியப் போலீஸ்புலிகள் எப்ரல் 7ந்தேதியன்று கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்தவர் என்பதற்காக கைது செய்தது, அதுவும் வீட்டில் எந்த ஆணும், பாத்வாஜின் நண்பரும் இல்லாத பொழுது, அவருடைய தாயும் சகோதரிகளும், கம்யூனிஸ்டுக்கட்சிக் காம்ரேடுகளின் தாய, சகோதரிகள் ஆகியோரும் அவரைச் சூழ்ந்து நின்றபொழுது!

★

தோழியர்கள் மெதுவாக பாத்வாஜைப் போலீஸ் லாரியில் உட்கார வைத்தனர்! ஒருமுறை—கடைசி முறையாக—தன் வீட்டையும் தன் அன்புத் தாயையும் நிமிர்ந்து பார்த்தார்—அந்தப் பார்வையில் என்னென்ன எண்ணங்கள் தான் மின்னியதோ?—பார்த்துக்கொண்டே தன் குரல் முழுவதையும் எழுப்பி அடிவயிற்றிலிருந்த வேதனையை ஒலியாக்கி 'ஒங்குக கம்யூனிஸ்டுக் கட்சி' என்று ஒரு சிம்மக்குரலை எழுப்பினர்!

'புலி இழிக்கும் என் மகனே! என்று கூறுவதுபோல அவர் அன்னையின் குரலும், என்ன

சொல்கிறேமென்று தெரியாமலே 'ஓங்குக தம் யூனிஸ்டு கட்சி!' யென்று ஒலித்தது..... லாரியில் கண்களை மூடிக்கிடந்த பாத்வாஜ் தன் காம்ரேட்டுகளின் சகோதரிகள், தாய்மார்கள ஆர்வம் ததும்ப எழுப்பிய 'வாழ்க பாத்வாஜ்!' என்ற பேரொலி முழுமையும் கேட்பதற்குள் போலீஸ் லாரி பறந்தது!

★

எப்பால் இந்தேதி! காருண்ய காங்கிரஸ் அரசாங்க சரித்திர ஏடு இரத்தத்தால் நனைக்கப்பட்ட நாள்! கடும் காயச்சலுடன், அழைத்துச் செல்லப்பட்ட பாத்வாஜ் உடல் டோராடோன் சிறையில் அருமை மனைவி, அன்புத்தாய் கட்சித் தோழர் யாருமின்றி அநாதியாகக் கிடந்தது!

★

மக்களின் வாழ்வுக்காக வாழ்ந்த லட்சிய வீரர் ஒருவரின் உயிர் காற்றோடு கலந்தது. கடைசி நேரத்தில் அவர் நினைவில் எத்தனை எண்ணங்கள் மின்னியதோ?—தாயின் அன்பு முகம் வந்திருக்கும், "தான் தந்துவந்த 'கடிதம்' தன் மனைவிக்கு கிடைத்திருக்குமா? அவள் என்ன எண்ணியிருப்பாள்?" என்ற ஆசை நினைவு அலைக்கழித்திருக்கும்!..... ஒரு வீர், பரிபூரண லட்சிய வாதியின் உடல் அன்று மறைந்துவிட்டது! அவர் உடல் பாடையிலேற்றப்பட்டு பரோடோபமின்றி, எந்தக் காங்கிரசுக்கு தன் உயிரை அர்பணிக்கும் அளவு உழைத்தாரோ அதே காங்கிரஸ் அதிகார மூட்டைகளின் இடுக்கி நகங்களில் வேதனை நிறைந்த வேளையின் போது அவர் உயிர் இன்னுயிர்நீங்க ஆகிவிட்டது!

★

ஒரு தோழர் செங்கொடியை லட்சிய வீரரின் பிணத்தின்மேல் சாத்தச் சென்றாராம்.

துக்க நேரத்தில்கூட காங்கிரஸ் ஸ்பருக்கு இது சகிக்கவில்லை. 'இது கூடாது மூவர்ணக் கொடியை வையுங்கள்' என்று கூச்சல் போட்டாராம் தேசியத் தோழர்!

அதற்கு சடேரென ஒரு தோழர் அளித்த பதில்: "தேசியக் கொடி இருக்கவேண்டிய இடத்தில்—அதோ பணமூட்டையின் வீட்டில், சிறைச்சாலையின் இரும்புச் சுவற்றில் பறந்து கொண்டிருக்கிறது! இங்கு, இவர் அருகில் இருக்க அதற்கென்ன அருகதை?" என்றாராம்!

அவர் பதில்...இலை!..... இதய ஓசை...இந்நாடு முழுதும் என்றுதான் ஒலிக்குமோ?

சுவைத்ததில்!

இராவணன்.

அன்பர் A. K. வேலன் சுய மரியாதை உலகக்கூடத்தில் இராமாயணத்தை தட்டி கொளுத்து... இராவணன் என்ற நூலாக ஆக்கியுள்ளார். குறையொன்றிலா அறிவுக்குவியல்! அழகு வழியும் அட்டைப்படம் —அய்யா, அண்ணை, கவிஞர் ஆகியோர் சிறப்புரைகள். சொல்ல வேண்டுமா சுவையை!

விலை 1—12—0

கிடைக்குமிடம்:
செந்தமிழ்ப் பாசறை, கரந்தை.

மீண்ட இன்பம்.

ஆசிரியர், கா. மு. முத்தையர்.

விலை: 1—8—0 கிடைக்குமிடம்: தமிழகம், ராமச்சந்திராபுரம்.

தோழர் கா. மு. முத்தையா நல்ல எழுத்தாளர். மீண்ட இன்பத்தை படித்தவர்கள் இந்த அபிப்பிராயத்தை மறக்க முடியாது. விறுவிறுப்பான கதைப் போக்கும் வெள்ளப் பெருக்கனைய தமிழோட்டமும் மீண்ட இன்பத்திற்கு சிறப்பு தருகின்றன.

இன்பத்துளி.

ஆசிரியர்,
கு. மா. பாலசுப்பிரமணியம்.

விலை: 1—8—0

கிடைக்குமிடம்: தொண்டன் பிரசுராலயம், திருவாரூர்.

கற்கண்டுக் கட்டிகள் பலவற்றை சேர்த்து நூலாக்கியுள்ளார். தெள்ளுதமிழ்...தேன் தளும்பும் கடை.....ஒரே ஒரு குறை...இன்ப அருவிக்கு இன்பத்துளி என்ற பெயரிட்டிருப்பதுதான்!

விசயபுரம்
செல்வம் சிற்றுண்டி உணவு நிலையம்.

தேனீர் விருந்துகளுக்கும்,
உயரிய சிற்றுண்டிகளுக்கும் உகந்த இடம்.

P. அய்யாசாமி, நிர்வாகி. A. முத்துகிருட்டினன், உரித்தாளர்.

ஆசிரியரும், வெளியிடுபவரும்: மு. கருணாநிதி, திருவாரூர்.
அச்சிடுபவர்: கருணை. எம். ஜமால். கருணாநிதி [மின்னியக்க] அச்சகம், விஜயபுரம்.